பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**14 12 2025** **6 30**

ஞாயிற்றுக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் நினைவு அஞ்சல்தலையை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் புதுதில்லியில் இன்று வெளியிட்டார்.

2. மத்திய அரசின் திட்டங்கள் காரணமாக கிராமப்புற மக்களின் வாழ்க்கை பெருமளவு மேம்பட்டுள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

4. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நேர்மையான வாக்காளர் பட்டியல் தயாரிப்பை உறுதி செய்யும் என்று பிஜேபி கூறியுள்ளது.

5. ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Unnati Hooda** பட்டம் வென்றார்.

... இனி விரிவான செய்திகள் ...

<<<<>>>>

பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் ஆயிரத்து 350வது பிறந்தநாளையொட்டி, அவரது நினைவு அஞ்சல்தலையை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் புதுதில்லியில் இன்று வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், பெரும்பிடுகு முத்தரையர் சுவரன் மாறன் ஆட்சிக்காலத்தில் மேற்கொண்ட ஆன்மிக மற்றும் கலாச்சார பணிகள் தமிழகத்தின் பெருமையை உலகெங்கும் கொண்டு சேர்த்திருப்பதாக கூறினார்.

**(Voice Byte - CPR - 40 Sec)**

தமிழ்க் கலாச்சாரம் மற்றும் மொழிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தைச் சேர்ந்த அறியப்படாத மன்னர்கள், தலைவர்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களை கௌரவிக்க பிரதமர் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பாராட்டு தெரிவித்தார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மாநிலங்களவைத் துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஷ் சிங், பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் திட்டங்கள் காரணமாக கிராமப்புற மக்களின் வாழ்க்கை பெருமளவு மேம்பட்டுள்ளதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம் ஏழை-பணக்காரர் பாகுபாடு வெகுவாக குறைந்துள்ளதாகவும், கிராமப்புற மக்களின் நுகர்வு அதிகரித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கார், மோட்டார் சைக்கிள்கள், குளிர்பதனப் பெட்டிகள் மற்றும் தொலைக்காட்சி போன்றவை தற்போது கிராமப்புறங்களிலும் மக்கள் பயன்படுத்தப்படுவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது மக்களின் வாழ்க்கைத் தரம் செழிப்படைந்துள்ளதை எடுத்துக்காட்டுவதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் காலிப் பணியிடங்களே இல்லை என்று உண்மைக்குப் புறம்பான தகவல்களை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து அக்கட்சியை சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு. விஜயபாஸ்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆரம்ப சுகாதார நிலையம் முதல் மாவட்ட மருத்துவமனைகள், மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை மருத்துவ பணியாளர் பற்றாக்குறை இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

போதிய பணியாளர்கள் இல்லாததால் ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் மருத்துவமனைகள் கட்டி முடிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் திறக்கப்படாமல் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஏழை எளிய மக்களின் நலனைப் பாதுகாக்க காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்றும் திரு. விஜயபாஸ்கர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் நேர்மையான வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் மேற்கொள்ளப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளை பிஜேபி ஆதரிப்பதாக அக்கட்சியின் மகளிர் அணித் தலைவர் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று அக்கட்சியின் வாக்குச்சாவடி முகவர்கள் பயிலரங்கில் பங்கேற்ற பின் அவர் செய்தியாளர்களிடம் பேசினார்.

இந்தப் பணிகளை எதிர்ப்பது போன்று திமுக மறைமுகமாக ஆதரிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்கள் உண்மையிலேயே அப்பகுதியில் இல்லையா என்பதை வாக்குச்சாவடி முகவர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் திருமதி வானதி சீனிவாசன் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தென்காசி மாவட்டம் குற்றால அருவிகளில் வார விடுமுறையை முன்னிட்டு இன்று சுற்றலாப் பயணிகளின் வருகை அதிகரித்து காணப்பட்டது.

ஆர்ப்பரித்துக் கொட்டும் தண்ணீரில் மக்கள் குடும்பத்துடன் குளித்து மகிழ்ந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - செந்தில் - 42 Sec)

இதேபோன்று கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவியிலும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் நீராடியதுடன், அருவிக்கு மேலே உள்ள கோதையாற்றில் ஆர்வத்துடன் படகு சவாரியும் மேற்கொண்டனர்

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் உதகை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இரண்டாவது நாளாக இன்றும் கடும் உறைபனி நிலவுகிறது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Saravanan - 41 Sec)

<<<<>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வரும் 19ஆம் தேதி முதல் 29ஆம் தேதி வரை நடைபெற உள்ள புத்தகத் திருவிழாவை மாணவர்கள் மற்றும் புத்தக ஆர்வலர்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

----------------

கொடைக்கானல் பேரிஜம் ஏரி வனப்பகுதியில் கருஞ்சிறுத்தை நடமாட்டத்தை அடுத்து சுற்றுலாப் பயணிகள் கவனத்துடன் இருக்குமாறு வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

----------------

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது.

----------------

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நாகப்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

----------------

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் காவிரிக் கரையில் கார்த்திகை கடைஞாயிறு தீர்த்தவாரியை முன்னிட்டு தருமபுரம் ஆதீனம் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் புனித நீராடி வழிபட்டனர்.

----------------

சென்னை மெட்ரோ ரயில் பணிக்காக கொண்டு செல்லப்பட்ட **97** லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை திருடிச் சென்ற லாரி ஓட்டுநர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

----------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Unnati Hooda** பட்டம் வென்றார்.

கட்டாக்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **21-17, 21-10** என்ற செட் கணக்கில் **Isharani Baruah**-ஐ வென்றார்.

ஆடவர் பிரிவில் கிரண் ஜார்ஜ் பட்டம் வென்றார்.

ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **21-14, 13-21, 21-16** என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் முகமது யூசுஃபை வென்றார்.

--------------

சென்னையில் நடைபெற்று வரும் உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா - ஹாங்காங்கை எதிர்த்து ஆடி வருகிறது.

-----------------

19 வயதிற்குட்பட்டோருக்கான ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 90 ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

துபாயில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

மழை காரணமாக போட்டி 49 ஓவர்களாக குறைக்கப்பட்ட நிலையில் 46 புள்ளி ஒரு ஓவரில் 240 ரன்னுக்கு இந்திய அணி ஆட்டமிழந்தது.

இதையடுத்து 241 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்த பாகிஸ்தான் அணி 41 புள்ளி 2 ஓவரில் 150 ரனுக்கு ஆட்டமிழந்தது.

-------------

லெபனானில் நடைபெற்ற ஆசிய தற்காப்புக் கலை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

--------------

துபாயில் நடைபெற்ற ஆசிய இளையோர் பாரா விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 19 தங்கம், 15 வெள்ளி, 22 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

**<<<<The End>>>>**